Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 14 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :115 பங்குனி 11ஆம் நாள் திங்கட்கிழமை 23 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## ஊரடங்கு நேரம் உலாவிய 790 பேர் கைது

256 வாகனங்களும் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 23

ஊரடங்கு உத்தரவை மீறி வீதியில் நடமாடினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுவரை 790 பேர் 02

### அடுத்த இரு வாரங்களுக்கு

# வடக்கு மக்களே மிக அவதானம்!

### மருத்துவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதுடன், சுவிஸில் இருந்து இங்கு வந்து ஆராதனை நடத்திய மதபோதகருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், வடக்கு மாகாண மக்கள் அடுத்த இரு வாரங்களும் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். 02

### கொரோனா தொற்றுக்குள்ளான

## தாவடியைச் சேர்ந்தவர் கொழும்புக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் கண்டறியப்பட்ட முதலாவது கொரோனா நோயாளி நேற்று மாலை விசேட அம்புலன்ஸ் மூலம் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

சுவிஸிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஆராதனை நடத்த வந்த மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று இந்தத் தகவலை வெளியிட்டது. இதற்கிடையில் மதபோதகருடன் தொடர்பிலிருந்த தாவடியைச் சேர்ந்த 42 வயதான கட்டட ஒப்பந்தகாரர், கொரோனா தொற்றுக்குரிய அறிகுறி 02

### மதபோதகரால் கொரோனா:

## சுகாதாரப் பணிப்பாளரை விசாரித்தது பொலிஸ்!

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் அரியாலையில் அமைந்துள்ள பிலதெனியா தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனை வழிபாட்டில் கலந்து கொண்டவர்களைப் பதிவு செய்யுமாறு அழைப்பு விடுத்தமை தொடர்பில் 11

## ஆராதனையில் பங்கேற்ற 147பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், மார்ச் 23

அரியாலையில் அமைந்துள்ள தேவாலயத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற ஆராதனையில் பங்கேற்ற 147 பேர் யாழ்ப்பாணத்தில் அடையாளம் 02

## முற்றுகைக்குள் வடக்கு

### ஊரடங்கு நீடிப்பு: மாகாணத்துக்கு வெளியே செல்லத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 23

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு சட்டம் நாளை செவ்வாய் காலை 6 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்குச் சட்டம் மதியம் 2 மணிக்குப் பிறப்பிக்கப்பட்டு நாளை காலை 6 மணிக்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பா 02

## பேக்கரி உற்பத்தி பொருள்கள் வீடு தேடி வரும்

யாழ்., மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் இன்று தொடக்கம் பேக்கரி உற்பத்திப் பொருள்கள் 'மொபைல் சேர்விஸ்' ஊடாக வீடு தேடி வந்து வழங்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலர் கா.பாஸ்கரன் தெரிவித்தார்.

வீடு தேடிச் சென்று பேக்கரி உற்பத்திப் பொருள்களை வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒவ்வொரு பேக்கரி உரிமையாளர்களும் தத்தமது பிரதேச செயலர்கள் ஊடாக, பொலிஸாரின் அனுமதியைப் பெற்று இதனைச் செயற்படுத்த முடியும். இன்று 02

### ஊரடங்கு தளர்வு நேரத்தில்

## வர்த்தக நிலையங்களில் கூட்டமாக நிற்கவேண்டாம்

### மாவட்டச் செயலர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு தளர்த்தப்படும் போது மக்கள் முண்டியடித்து வர்த்தக நிலையங்களுக்குச் சென்று அங்கு கூட்டமாக நிற்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை 11

## 14 ஆண்டுகளின் பின் மூடப்பட்டது ஏ-9 வீதி

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளி கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து வடக்குக்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாகக் காணப்பட்ட ஏ9 வீதி மூடப்பட்டுள்ளது. வடக்கில் கொரோனா தொற்றுப் பரவியுள்ள சந்தேகத்தில் நோயாளர்களைக் கண்டறியும் வகையிலும், தொற்றுக்குள்ளானவர்கள் வெளி மாகாணங்களுக்குச் செல்லாமல் தடுக்கும் நோக்கிலும், ஏ9 வீதி பாதுகாப்புத் தரப்பினரால் மூடப்பட்டுள்ளது. 02

## கொரோனா தொற்று 82:

### ஆண்களின் மீதே அதற்கு அதிக பற்று

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்று 82 ஆக 02

## போதகருடன் பழகிய 17 பேர் தனிமைப்படுத்தல் மையத்துக்கு

### சுகாதாரப் பணிமனை தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சுவிஸிலிருந்து வந்த மதபோதகருடன் நெருங்கிப் பழகியதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 17 பேரையும் யாழ்ப்பாணத்திலுள்ள தனிமைப்படுத்தல் மையத்துக்கு இன்று காலை அனுப்பவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதாரப் பணிமனை வட்டாரங்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன. 02

## சுயதனிமைப்படுத்த மருத்துவருக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது கொரோனா நோயாளி தனியார் கிளினிக்கில் சிகிச்சை பெற்றுள்ளார். அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை இரண்டு வாரங்களுக்கு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்பட்டு இருக்க யாழ்ப்பாணம் 02

# யாழில் கொரோனா தாண்டவமாடினால் வடக்கைத் தொடர்ந்து முடக்குவதே தீர்வு

## இராணுவத் தளபதி சவேந்திர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆண் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு மேலும் பலர் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டால் வடக்கு மாகாணத்தை ஓரிரு வாரங்களுக்குத் தொடர்ந்து முடக்கி வைப்பதே ஒரே வழியாகும். அப்போதுதான் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில்தான் ஊரடங்குச் சட்டத்தை வடக்கில் நீடித்து ள்ளோம். ஏனெனில் வடக்கில் மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள். அவர்கள் வெளியில் திரியும்போது நோய்த் தொற்று அதிவேகத்துடன் பரவும். அவர்கள் தேவையற்று வெளியில் வராமல் சில நாட்களுக்கு வீட்டுக்குள் இருப்பதே நலம்.

சுவிஸிலிருந்து கடந்த 10ஆம் திகதி கடுமையான காய்ச்சலுடன் இலங்கை வந்திருந்த மதப் போதகர் ஒருவர் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆராதனை நடத்தியுள்ளார். அவர் சுவிஸ் திரும்பியதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் அவருடன் தனிமையில் இருந்து உரையாடியவருக்கே கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் போதகருடன் 180 பேர் நெருக்கமான தொடர்பைப் பேணியுள்ளனர் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்களை அடையாளம் காண்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவர்கள் தாமாகவே முன்வந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொண்டு தங்களையும் ஏனையோர்களையும் பாதுகாப்பதே சிறந்தது.

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் நோயால் மேலும் பலர் பாதிக்கப்பட்டால் வடக்கு மாகாணத்தை ஓரிரு வாரங்களுக்குத் தொடர்ந்து முடக்கி வைப்பதே ஒரே வழியாகும். ஏனெனில் அப்போதுதான் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்றார். (ஒ,5,22)

---

### வடக்கு..

கொரோனா வைரஸ் தொற்றுடன் சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் ஆராதனைக் கூட்டம் நடத்தியுள்ளார். மதபோதகர் சென்று வந்த இடங்கள் அவரைச் சந்தித்தவர்கள் என்று பல தரப்பட்டவர்களுக்கு வைரஸ் தொற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருக்கு நோய்த் தொற்று ஏற்பட்ட பின்னர் யாரைச் சந்தித்தார், எங்கு சென்றார் என்ற விடயங்கள் ஆராயப்பட வேண்டும். அவர் ஊடாகவும் வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம்.

தொற்று ஏற்பட்டவர்களுக்கு அறிகுறிகள் தென்படுவதற்கு சில நாள்கள் எடுக்கும். அதற்கிடையில் அவர்கள் ஊடாக ஏனையோருக்கும் பரவ வாய்ப்புண்டு. எனவே, வடக்கு மாகாண மக்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்கு அவதானமாக இருக்கவேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். (ஒ,5)

### ஆராதனையில்..

காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 41 பேரும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 51 பேரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 34 பேரும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 16 பேரும், ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் 5 பேருமாக அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை கொரோனா தொற்று அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஆயிரத்து 312 பேரும் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலர் மேலும் குறிப்பிட்டார். (ஒ,5)

### முற்றுகைக்குள்...

ணத்தில் கொரோனா தொற்று ஒருவருக்கு உறுதிப்படுத்தப்பட்டதுடன், சுவிஸிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சென்ற மதபோதகருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்குச் சட்டம் பி.ப. 2 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பின்னர் எப்போது நீக்கப்படும் என்பது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, "வடக்கின் 5 மாவட்டங்களிலும் வாழும் மக்களுக்கு தாங்கள் வாழும் மாவட்டங்களுக்கு வெளியே பயணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. கடந்த தினங்களில் வடக்குக்கு பயணம் செய்த சுவிட்சர்லாந்தில் இருந்து வருகை தந்த கொரோனா வைரஸ் தொற்றுடைய மதபோதகரைச் சந்தித்த மற்றும் அவருடன் தொடர்புகொண்ட அனைவரையும் அடையாளம் காணும் வரை இந்தப் பயணத் தடை நடைமுறையில் இருக்கும். ஐந்து மாவட்டங்களிலும் வசிக்கும் மக்கள் கொரோனா தாக்கத்துக்கு உட்படுவதிலிருந்து பாதுகாக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் மக்கள் வாழ்க்கையை பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" என்று அரசு வடக்கு மாகாண மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஒ,5,22,44)

### 14 ஆண்டுகளின்..

போர்க் காலத்தில், 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏ9 வீதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்கான ஓமந்தை மற்றும் முகமாலையில் மூடப்பட்டது. அதன் பின்னர் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நேற்று இரவு மூடப்பட்டுள்ளது.

சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஆராதனைக் கூட்டத்தில் பங்குபற்றியோர் முழுமையாக இதுவரை கண்டறியப்படவில்லை. அவர்களைக் கண்டறிவதற்கான தேடுதல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை மதபோதகர், அவருடன் தொடர்பிலிருந்த கட்டட ஒப்பந்தகாரர் என்று இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தல் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்காகவும், ஏ9 வீதி நேற்று இரவுடன் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,110)

### ஊரடங்கு...

கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிவரையான காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவசர தேவைகள் தவிர வேறெந்தக் காரணம்கொண்டும் பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் என்றும் அவர் மக்களை அவர் கேட்டுள்ளார். (த22)

### பேக்கரி...

காலைதொடக்கம்பேக்கரிஉற்பத்திப்பொருள்கள்வீடுதேடிவரும்,என்றார். (ஒ,5)

### கொரோனா...

அதிகரித்துள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு தொற்றுக்கு ஆளாகும் நபர்களில் அதிகமானோர் ஆண்கள்தான் என்றும், கொரோனா தொற்றால் பெண்கள் பாதிக்கப்படுகின்றமை ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ளது என்று அமைச்சின் புள்ளிவிவரங்கள் எடுத்துக்கூறுகின்றன.

அதன்படி 69 வீதமான ஆண்களும் 31 வீதமான பெண்களுமே கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொற்றுக்குள்ளானவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தவர். ஏனையோர் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் புதுப்பிக்கப்பட்ட அறிவிப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது. (து)

### போதகருடன்...

மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அத்துடன் அவரைச் சந்தித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருக்கும் கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து மதபோதகருடன் நெருக்கமாகப் பழகிய, சாரதி, போதகர்கள் உள்ளிட்ட 17பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களை தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி 14 நாள்கள் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

### தாவடியை...

யுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 20ஆம் திகதி சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது. இந்தத் தகவலை மருத்துவமனைப் பணிப்பாளர் வெளியிட்டிருந்தார்.

மதபோதகருடன் கடந்த 13ஆம் திகதி, அதாவது ஆராதனை இடம்பெறுவதற்கு முன்னர், கட்டட ஒப்பந்தகாரர் கலந்துரையாடியுள்ளார். மதபோதகர் தங்கியிருந்த இல்லத்தில் அவருடன் தனித்து இவர் சுமார் 20 நிமிடங்கள் உரையாடியுள்ளார். அதன் பின்னர் கடந்த 18ஆம் திகதி அவருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. 19ஆம் திகதியும் தொடர்ந்துள்ளது. இதனையடுத்து 20ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கொரோனா இருப்பது மருத்துவ பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. நேற்று மாலை 5.30 மணியளவில், அம்புலன்ஸ் ஊடாக அவர் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஒ,5,105)

### சுய தனிமைப்படுத்த...

போதனா மருத்துவமனை நிர்வாகத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் சுவிஸிலிருந்து வந்த மதபோதகரை தனித்து சந்தித்துப் பேசியவர்.

கடந்த 18ஆம் திகதியும், 19ஆம் திகதியும் காய்ச்சலுக்கு, தாவடியிலுள்ள தனியார் கிளினிக்குச் சென்றுள்ளார். 20ஆம் திகதியே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவருக்கு கிளினிக்கில் சிகிச்சையளித்த மருத்துவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்று மாலை சென்றுள்ளார்.

அவரை வீட்டில் தனிமையில் இருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# யாழ்ப்பாணம் வந்த சுவிஸ் போதகருக்கு கொரோனா உறுதி

## அயலுறவுத்துறை அமைச்சு உறுதிப்படுத்தியது

**யாழ்ப்பாணம், மார்ச் 23**

**சுவிஸிலிருந்து அரியாலைக்கு வருகை தந்த மதபோதகருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது வெளியுறவு அமைச்சின் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

கடந்த பத்தாம் திகதி காலை வருகை தந்த 61 வயதுடைய சுவிஸ் பிரஜையான மதபோதகர் சிவராஜ்போல் சற்குணராஜா, யாழ்ப்பாணம் அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெனியா தேவாலயத்தில் ஆராதனை நிகழ்விலும் வேறு சில நிகழ்வுகளிலும் பங்கு பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி மீண்டும் தனது நாட்டுக்குச் சென்ற பின்னர் அங்கு அவருக்கு கொரோனா வைரஸ் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுவிஸர்லாந்தின் பேண் நகரில் உள்ள இன்செல்ஸ்பிற்றல் பல்கலைக்கழக மருத்துவமனையில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கான சிகிச்சையை அவர் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதகரின் தலைமையில் நடைபெற்ற ஆராதனை நிகழ்வுகளில் பங்கெடுத்த அனைவரும் தங்கள் வீடுகளில் உடனடியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதுடன் தங்களது விவரங்களை அருகில் உள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தங்களுடையதும் தங்களைச் சார்ந்தவர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மிக அவசியமானதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும், என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

# உணவு விநியோகத்துக்கு வர்த்தக சங்கம் நடவடிக்கை

## ஊரடங்கு நேரத்தில் சென்றுவர அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாண மக்களுக்குத் தடையின்றி உணவு விநியோகத்தை முன்னெடுக்க, ஊரடங்கு நேரத்திலும் லொறிகள் கொழும்பு சென்று வருவதற்கு அனுமதி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

மொத்த வியாபாரிகள், பொருள்களை இறக்குமதி செய்து விநியோகிப்போர், ஊரடங்கு நேரத்திலும் கொழும்புக்குச் சென்று பொருள்களை ஏற்றி வந்து விநியோகிக்க முடியும். இதற்கான அனுமதியை யாழ்ப்பாண வணிகர் கழகம் பெற்றுக் கொடுக்கும்.

அவ்வாறு கொழும்புக்குச் சென்று வரவுள்ளவர்கள், தமது விவரங்களை இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் பதிவு செய்து கொள்ள முடியும்.

லொறி விவரம், சாரதி மற்றும் உதவியாளர் விவரங்களுடன் வணிகர் கழகத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மா, சீனி உள்ளிட்ட பலசரக்குப் பொருள்கள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்துக்கு போதுமானளவு எடுத்துவரப்பட்டுள்ளன. (ஒ,5)

# கொரோனாவைத் தடுக்க 70 மில்லியன் நன்கொடை

கொழும்பு,மார்ச் 23

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர மருத்துவ சேவைகளுக்காக, தனது தனிப்பட்ட நிதியிலிருந்து 70 மில்லியன் ரூபாவை வழங்குவதாக தொழிலதிபர் தம்மிக்க பெரேரா அறிவித்துள்ளார். அவரது நிதியிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ஆறு செயற்கை சுவாசக்கருவிகள், அவசரசிகிச்சைப் பிரிவுக்கான குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான 169 படுக்கைகள் உட்பட 485 மருத்துவப் படுக்கைகள் வழங்கப்படவுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ முன்னெடுத்துள்ள செயற்றிட்டங்களுக்கு, எனது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவேன். இந்த உதவி முதற்கட்டமானது. அடுத்துவரும் காலப்பகுதியில் தேவைகளுக்கு ஏற்றவகையில் மேலதிக உதவிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (க)

# புத்தளத்திலிருந்து மக்கள் மன்னாருக்கு படையெடுப்பு

மன்னார், மார்ச் 23

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அதிகமாகத் தொடங்கிய பின்னர் புத்தளம் மாவட்டத்திலிருந்து 101 குடும்பங்கள் மன்னாருக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. புத்தளம் மாவட்டத்தில் கொரோனோ தொற்று அச்சம் காரணமாக அங்கு தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த மாதம் 14ஆம் திகதியிலிருந்து மன்னார் மாவட்டத்துக்கு 101 குடும்பங்கள் வந்துள்ளன. இவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். புத்தளத்தில் இடம்பெயர்ந்து வசித்து வந்தனர். போர் முடிந்த பின்னரும் மன்னார் பதிவுகளை வைத்திருந்தாலும் புத்தளம் மாவட்டத்தில் வசித்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 14ஆம் திகதியிலிருந்து 22 ஆம்திகதி வரை 101 குடும்பங்கள் மன்னாருக்குத் திரும்பியுள்ளன. (ஒ,5,105)

# கூலித் தொழிலாளருக்கு உலர் உணவு வழங்கவும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் 87 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டனவாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன.

அவர்களுக்கு உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கவும். இடர் முகாமைத்துவ அமைச்சினூடாக இதனை முன்னெடுக்க வும். இதற்குரிய நிதியை அரசிடமிருந்து நான் பெற்றுத் தருவேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொரோனா தடுப்பு முன்னாயத்தக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் ஆராயப்பட்டது. தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அன்றாடக் கூலித் தொழில் செய்பவர்களுக்கு என்ன செய்வது என்று ஆராயப்பட்டது. அவர்களுக்கு இடர்முகாமைத்துவ அமைச்சின் ஊடாக உலர் உணவு வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. தேசிய ரீதியில் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டால் நாமும் இதனைச் செய்ய முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உலர் உணவுப் பொருள்களை வழங்குங்கள். அதற்குரிய நிதியை அரசிடம் பெற்றுத் தருகின்றேன்- என்றார். (ஒ,ப)

# அவசரசேவையிலுள்ளோருக்கு சிறப்பு எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23



ஊரடங்குச் சட்ட வேளையிலும் அவசர சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தனியான எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஒதுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களே இவ்வாறு சிறப்பு எரிபொருள் நிரப்பு நிலையங்களாகச் செயற்படவுள்ளன.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலிலேயே மேற்படி விடயம் ஆராயப்பட்டது. ஊரடங்குச் சட்ட வேளையிலும் அவசர சேவையில் பலர் ஈடுபட்டுள்ளனர். சுகாதாரத் துறையினர் உள்ளிட்ட பலர் இதில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தமது பணியிடங்களுக்குச் சென்று வருவதற்கு எரிபொருள் தேவை. ஊரடங்குச்சட்டம் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டன. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளையில் பொதுமக்களும் எரிபொருள் நிரப்புவதற்கு வருவார்கள். சனநெருக்கடியில் அவர்கள் எரிபொருள் நிரப்புவதற்கு நீண்ட நேரம் காத்திருக்க நேரிடும்.

ஊரடங்குச் சட்ட நடைமுறையிலுள்ளபோது குறிப்பிட்ட நேரத்தை அறிவித்து ஒவ்வொரு இடங்களுக்கும் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை திறந்து வைத்தால் இலகுவாக இருக்கும் என்று மருத்துவ அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாண நகர், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமத்தில் கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களை இதற்கு அடையாளப்படுத்துமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

மேலும், பலசரக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் இதேபோன்று தனியார் வர்த்தக நிலையங்களை அடையாளப்படுத்தி வழங்குமாறு வர்த்தக சங்கத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது. (ஒ,ப)

# கொரோனா தொற்றாளிகளுக்கு உயர்தர சிகிச்சை வழங்குக!

## அரசிடம் மாவை வலியுறுத்து

**யாழ்ப்பாணம்,மார்ச் 23**

**இலங்கை அரசு கொரோனா வைரஸ் கிருமி பரவாமல் அனைவருக்கும் முதலுதவியாக தடுப்பு மருந்துகளையும், நோயாளிகளானால் அவர்களுக்கு உயர்தர மருத்துவத்தையும் வழங்க அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் கடந்த இரு வாரங்களில் 185 நாடுகளுக்கு பரவியுள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்படைந்தும், பல ஆயிரம் மக்கள் மரணமடைந்தனர் என்ற செய்திகள் ஒவ்வொரு நிமிடமும் பரவி வருகின்றன. இன்றுவரை இலங்கையில் 70 க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் செம்மணி அரியாலைப் பகுதியில் இருவர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். தேவாலயங்களில் கூடிய மக்கள் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்குத் தேடுதல் நடத்தப்படுகிறதென்பதும் மக்களிடையே பெரும் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

ஏனைய நாடுகளில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த எடுக்கும் அனைத்து மருத்துவப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இலங்கை பின்பற்ற வேண்டும்.உலக சுகாதார நிறுவனம், சுகாதாரத் துறை மருத்துவ மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவோரின் அறிவித்தல்களைக் கண்டிப்பாக மக்கள் பின்பற்ற வேண்டும். அறிவிக்கப்படுகின்ற விதிகளை மீறாமல் கொடிய நோயால் தொற்றுக்குள்ளாவதைத் தடுக்க ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முப்பது ஆண்டுகளுக்கு மேலான போர் காரணமாகப் பெரிதும் பாதிப்புற்றதேசமும், மக்களும் அதிகளவில் முதியோரையும், ஊட்டச் சத்து அற்ற குழந்தைகளையும், கர்ப்பிணித் தாய்மாரையும் கொண்டுள்ளது. இங்கு கொரோனா வைரஸ் தொற்று தமிழ் மக்களிடையே இலகுவாக ஏற்பட்டுவிடும் எனும் ஆபத்தை மதிப்பீடு செய்ய வேண்டும். நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் அவசியமாகின்றது- என்றுள்ளது. (க)



# முதுபெரும் கலைஞர் விசு நேற்று மறைவு!

புதுடெல்லி, மார்ச் 23

இயக்குனர், தயாரிப்பாளர், கதாசிரியர், வசனகர்த்தா, நடிகர் என்று பல்துறை வித்தகனாகச் செயற்பட்ட முதுபெரும் கலைஞர் விசு உடல்நலக் குறைவால் நேற்று உயிரிழந்தார். 1941ஆம் ஆண்டு பிறந்த கலைஞர் விசு, திரைப்படம் தவிர்த்து மேடை நாடகம், தொலைக்காட்சித் தொடர் பலவற்றிலும் நடித்துள்ளார். நடிகர் கிஷ்மு இவரது சகோதரர் ஆவார். இவர் இயக்கிய சம்சாரம் அது மின்சாரம் திரைப்படம் விசுவின் கலை வாழ்வில் பெரும் திருப்புமுனையைக் கொடுத்தது. (ம)

# கொரோனா' மருந்துகளை எடுத்துச்சென்றவர் சாவு

## அம்புலன்ஸ் விபத்தில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 23

'கொரோனா' வைரஸ் தொற்றுக்குள்ளான நபர்களுக்கு மருந்துப் பொருள்களையும் பாதுகாப்பு ஆடைகளையும் அம்புலன்ஸில் எடுத்துச்சென்றுகொண்டிருந்த சாரதி விபத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் கொழும்பு பொலநறுவை வீதியில் கொக்கரல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

தொடம்கஸ்லந்த பகுதியைச் சேர்ந்தவரே விபத்தில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் கொழும்பிலிருந்து பொலன்னறுவை ஆதார மருத்துவமனைக்கு மேற்குறித்த பொருள்களைக் கொண்டுசென்றார் என்றும் அதன்போது வீதியிலிருந்து விலகி நடைபாதை தடைக்கல்லில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த அம்புலன்ஸ் உதவியாளர் காயமடைந்த நிலையில் பொல்கொல்ல ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

# ஊரடங்கு வேளையில் சங்கக் கடை உடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கடை உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடை நேற்று உடைக்கப்பட்டு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. இதேவேளை, உடுப்பிட்டியில் அமைந்துள்ள சங்கக் கடையின் பூட்டு உடைக்கப்பட்ட போதும் பொருள்கள் திருடப்படவில்லை. வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் இடம்பெற்ற கொரோனா முன்னாயத்தக் கூட்டத்திலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அன்றாடக் கூலித் தொழிலாளர்களுக்கு உலர் உணவு வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 1991ஆம் ஆண்டு அனலைதீவு விடுவிக்கப்பட்டபோது அங்குள்ள மக்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. நான் அங்குள்ள சங்கக் கடையை உடைத்து மக்களுக்கு பொருள்களை வழங்கினேன். பின்னர் அரசிடமிருந்து காசைப் பெற்று அதனை வழங்கினேன். மக்கள் உணவில்லாவிட்டால் இப்படிச் செய்வார்கள் என்று கூறினார்.

இதன் பின்னரே, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இந்தத் தகவலை கூட்டத்தில் தெரிவித்தார். (ஒ,ப)

## வடக்கில்

# 3 உள்ளூராட்சி தலைவர்கள் நாடாளுமன்ற தேர்தலில் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளின் 3 தலைவர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை ஆகிய சபைகளின் தலைவர்களும் வவுனியா தெற்குப் பிரதேச சபையின் உப தவிசாளரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,105)



# சாதாரணதரப் பெறுபேறு வெளியாவதில் தாமதம்

கொழும்பு, மார்ச் 23

கடந்த வருடம் நடைபெற்ற க. பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடத் தாமதம் ஏற்படலாம் என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள் வெளியிட எதிர்பார்க்கப்பட்டிருந்தன. எனினும், கொரோனா நோய்த் தொற்று அபாயம் நீடிப்பதாலேயே இந்தத் தாமதம் என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த)

## ஆராதனை விவகாரம்:

# மன்னாரிலும் 11 குடும்பங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தல்

மன்னார், மார்ச் 23

மன்னார் மாவட்டத்தில் மடு மற்றும் நானாட்டான் பிரதேசங்களில் 11 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த மதப்போதகர் ஒருவரின் ஆராதனைக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் என்னும் சந்தேகத்தில் 11 குடும்பங்களும் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22,105)

# யாழில் கொரோனா தடுப்பில் மருத்துவர்களுக்கிடையே முரண்!

**யாழ்ப்பாணம், மார்ச் 23**

**கொரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்களுக்கும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளது. இந்த விவகாரம் நேற்று இடம்பெற்ற கொரோனா தடுப்பு முன்னாயத்தக் கூட்டத்திலும் எதிரொலித்தது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவர்கள் மீது பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.**

அம்புலன்ஸ் இலக்கம்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் கொரோனா தொற்று இருப்பதாகச் சந்தேகிப்பவர்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கு அம்புலன்ஸ் இலக்கம் அறிவிக்கப்பட்டது. அந்த இலக்கம் முறையாக வேலை செய்வதில்லை. இதனால் பெரிய நெருக்கடி ஏற்படுகின்றது என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் குற்றம் சுமத்தினர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட இலக்கத்துக்கு தனது கைப்பேசியிலிருந்து அழைப்பை ஏற்படுத்தினார். அதன்போது அதற்குப் பதிலளித்த மருத்துவமனைத் தரப்பினர், 1990 என்ற அவசர அம்புலன்ஸ் சேவையை தொடர்பு கொள்ளுமாறு பணித்தனர். அது அவசர அம்புலன்ஸ் சேவை இலக்கம் என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் தெரிவித்ததும் மீண்டும் அந்த இலக்கத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், கொரோனா தடுப்பு விவகாரத்துக்கு மருத்துவர் சிவபாதமூர்த்தியே பொறுப்பாக உள்ளார். 0719490094 அல்லது 021 222 2268 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

அவசர அம்புலன்ஸ் சேவைக்கு யாழ்ப்பாணத்தில் 5 அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை பொலிஸ் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு அம்புலன்ஸை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நிறுத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அந்த அம்புலன்ஸுக்கு கொரோனா தடுப்பு உபகரணங்கள் அடங்கிய ஆளணியை வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

**அரைவாசிப்பேர் திருப்பியனுப்பப்பட்டனர்**

தேசிய ரீதியாக கொரோனா தொற்றுக்குரியவர்களை அடையாளம் காண்பதற்கு சில வழிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக கொரோனா தொற்றுக்குரிய சந்தேகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தமை தொடர்பான பதிவுகள் இருந்தால் அவர்களை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இனம் கண்டு சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அறிவித்து அவர்கள் ஊடாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தால், அது சாதாரண தடிமன்தான் என்று கூறி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவர்கள் திருப்பி அனுப்புகின்றனர். நாம் உரிய படிமுறையைப் பின்பற்றி அனுப்பினால், அவர்களிமிருந்து மாதிரிகளைப் பெற்று பரிசோதனைக்கு அனுப்பாமல் திருப்பி அனுப்புகின்றனர். இவர்களுக்கு கொரோனா இருந்தால் அவர்கள் ஊடாக எத்தனையோ பேருக்கு பரவியிருக்கலாம் என்று சுகாதார மருத்துவ அதிகாரிகள் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள்.

**கூட்டம் நடத்தவும்**

இதேவேளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவர்களை தனியாக அழைத்து இது தொடர்பில் கூட்டம் நடத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர். வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருடன் அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்பதையும் இந்தக் கூட்டத்தில் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ஒ,ப)



## கேப்பாப்பிலவில் பௌத்த துறவிகள் உட்பட 203 பேர் தனிமைப்படுத்தல்

முல்லைத்தீவு, மார்ச் 23

இந்தியாவில் இருந்து நாட்டுக்கு வரவழைக்கப்பட்டவர்கள் படையினரின் கண்காணிப்பின் கீழ், தனிமைப்படுத்தும் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு விமானப்படைத்தளத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாமுக்கு நேற்று 41 பேர் அழைத்து வரப்பட்டனர். இந்தியாவில் இருந்து சிறப்பாக விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களில் 51 ஆண்களும், 147 பெண்களும், 5 பௌத்த மதகுருமார்களு மாக 203 பேர் இதுவரை கேப்பாப்பிலவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சு-19)

## அச்சமின்றி விவசாயம் செய்ய அரசு அனுமதிக்க வேண்டும்

*மட்டு. மாவட்டச் செயலர் கோரிக்கை*

மட்டக்களப்பு, மார்ச், 23

மட்டக்களப்பு சிறுபோக விசாயிகள் எவ்விதமான அச்சமுமின்றி தங்களின் விவசாயக் காணிகளுக்குச் செல்வதற்கான அனுமதியை பாதுகாப்புப் பிரிவுக்கு அரசு வழங்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா கோரியுள்ளார்.

சிறுபோக வேளாண்மைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் எவ்விதமான தடைகளும் இன்றி தங்களின் விவசாய பணிகளை தொடரலாம் என அரசு பணிப்புரைவிடுத்ததைத் தொடர்ந்தே மாவட்டச் செயலர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

விவசாயிகள் உரியகாலத்தில் தங்களின் பணிகளை முன்னெடுக்காது தவறும் பட்சத்தில் பயிர்ச்செய்கைக் காலம் பிற்போடப்படும், அவ்வாறு பயிர்ச்செய்கைக் காலம் தவறினால், அதன் பின்னர் நீர் வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, அதனால் உரிய காலத்தில் விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டச் செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு, சகல விவசாயிகளுக்கான மானிய உரவிநியோகம் எவ்விதமான தடையும் இன்றி உரிய காலத்துக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றது.

சிறுபோக விவசாயிகள் அச்சப்படத்தேவையில்லை, வழமையான நடைமுறையினை பின்பற்றி தங்கள் தொழிலில் ஈடுபடுங்கள் என்றும், மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ப -150)

## கொரோனா நீங்க சிறப்புத் திருப்பலி

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கை உட்பட முழு உலகையுமே அச்சுறுத்திவரும் கொடிய கொரோனா தொற்றில் இருந்து அனைத்து மக்களும் சுகம் பெறுவதற்காக யாழ்ப்பாணத்தில், சிறப்புத் திருப்பலி நேற்று ஒப்புக் கொடுக்கப்பட்டது.

யாழ் ஆயர் இல்லத்தில் காலை 6.30 மணிக்கு யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

ஊரடங்கு காரணமாகப் பொதுமக்கள் எவரும் வழிபாட்டில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சு- 7)



## மின் கட்டணத்துக்கு காலஅவகாசம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 23

கடந்த பெப்ரவரி மாத மின்சாரக் கட்டணத்தை எதிர்வரும் 31ஆம் திகதிவரை செலுத்தும் வகையில் காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மின் கட்டணங்களைச் செலுத்த பொதுமக்கள் இடையூறுகளை எதிர்கொள்ளக்கூடும். இந்த நிலையில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்குறித்த அறிவிப்பை நேற்று விடுத்தார். இந்தக் காலப்பகுதிக்குள் மின்சாரம் துண்டிக்கப்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சாரப் பட்டியல் கிடைத்த ஒரு மாதத்தில் மின் கட்டணத்தைச் செலுத்தவேண்டும் என்பது மின்சார சபையின் பொதுவான விதிமுறை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## ஊரடங்கில் உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரத்தில் அவசரமான உதவிகள், உணவுத் தேவைகள் இருப்பின் தொடர்பு கொள்ளுமாறு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் கேட்டுள்ளது.

தற்போது 50 பேருக்குத் தேவையான உணவுகள் தயாராக இருக்கிறது. யாழ். மாவட்டத்தை உள்ளடக்கிய ஏனைய கிராம மக்களும் உதவிகள் தேவைப்படின் தொடர்பு கொள்ள முடியும்.

தேவைப்படுவோர் 0775417659 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (கு)

# கொரோனா நோயாளிக்கு மலேரியாவுக்குரிய மருந்து

## தொற்றாளர்களுக்கு பயனளிக்காது என்று மருத்துவமனைகளுக்கு 5 லட்சம் பகிர்ந்தளிப்பு

**கொழும்பு, மார்ச் 23**
**மலேரியா காய்ச்சல் தொற்றுக்கு உள்ளான நோயாளர்களுக்கு வழங்கப்படும் 'க்ளோரோக்வின்' (Chloroquine) என்ற மருந்து 'கொவிட்19' வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு மருத்துவமனைகளின் உள்ளே மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜயசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.**

இருப்பினும், குறித்த மருந்து 'கொவிட்19' தொற்றாளர்களுக்கு பயனற்றது என்றும் தெரிவித்தார். எனவே 'க்ளோரோக்வின்' (Chloroquine) என்ற மருந்தை மக்கள் தேடுவதைத் தவிர்த்து வீடுகளிலேயே இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**5 லட்சம் மாத்திரைகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன**

இதேவேளை, 'கொவிட் 19' எனப்படும் 'கொரோனா' வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக மலேரியா நோயைக் குணப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும், க்ளோரோக்வின் மாத்திரைகள் 5 இலட்சத்தை அரச மருத்துவமனைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச ஔடதங்கள் தயாரிப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவரான மருத்துவர் உத்பல இந்ரவன்ச இதைத் தெரிவித்தார். அரச ஔடதங்கள் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 'க்ளோரோக்வின்' மாத்திரைகள் இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் மலேரியாவுக்காகத் தயாரிக்கப்பட்டது. பின்னர் இதற்கான தேவை குறைவடைந்தமையை அடுத்து குறித்த தயாரிப்பு இடைநிறுத்தப்பட்டது.

தற்போது, கொரோனா நிலைக்கு 'க்ளோரோக்வின்' மாத்திரைகள் தீர்வைத்தரும் என்பதைக் கண்டறிந்த நிலையில், அந்த மாத்திரைகளை உற்பத்திசெய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றிரவு மற்றும் நேற்று முன்தினம் ஆகிய தினங்களில் சுமார் ஐந்து லட்சம் 'க்ளோரோக்வின்' மாத்திரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை மருத்துவமனைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவற்றை நோயாளர்களுக்கு வழங்குவதற்கு விஷேட மருத்துவக் குழுக்கள் தீர்மானித்துள்ளன.

இதனூடாக அனைத்து நோயாளர்களுக்கும் நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் எதிர்பார்ப்பதாக அரச ஔடதங்கள் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான மருத்துவர் உத்பல இந்ரவன்ச தெரிவித்தார். எதிர்காலத்தில் தேவை ஏற்பட்டால் 20 லட்சம் க்ளோரோகிரின் ஔடதம் தயாரிக்கப்பதற்கான சாத்திய கூறுகள் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# 11 அரசியல் கைதிகள் யாழ் . சிறைச்சாலைக்கு மாற்றம்?

மன்னார்,மார்ச் 23
அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள், அவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று முன்னாள் நாடாமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம் பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து, சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளின் பெற்றோர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன்.

அரசியல் கைதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக சிறைச்சாலை அத்தியட்சகருடன் கலந்துரையாடினேன். சிறைச்சாலையில் உள்ள 11 அரசியல் கைதிகளும் பாதுகாப்பாக உள்ளனர் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

சிறைச்சாலையில் பாதுகாப்பு இல்லை என்றால் உடனடியாக மகசின் சிறைச்சாலைக்கோ அல்லது யாழ்பாணம் சிறைச்சாலைக்கோ அரசியல் கைதிகளை மாற்றும் படி கேட்டுக்கொண்டேன்.

அவர்களுக்குப் பாதுகாப்பு இருப்பதாகவும், பார தூரமான நிலைமைகள் ஏற்படுமாயின் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

சிறைச்சாலை ஆணையாளருடன் தொலைபேசியில் உரையாடி 11 அரசியல் கைதிகளின் பாதுகாப்பின்மை தொடர்பாக விளங்கப்படுத்தி, அவர்களை யாழ்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யும் படி கேட்டுக் கொண்டேன்.

உடனடியாக 11 தமிழ் அரசியல் கைதிகளையும், யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார்-என்றார். (க-56)



# சங்காவும் தனிமையில்!

கொழும்பு, மார்ச்.23
அரசாங்கத்தின் வழிகாட்டுதல்களின்படி கொழும்பில் தான் சுய தனிமைப்படுத்தலில் உள்ளதை இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார நேற்று உறுதிப்படுத்தியுள்ளார். அவர் அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுவந்தமையை அடுத்தே இந்த சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (அ)



# ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர் எரிபொருளுக்காக வரிசை வேண்டாம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச் 23
ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர், பெற்றோலுக்காக மக்கள் வரிசையில் நிற்க வேண்டாம். தேவையான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது இவ்வாறு தெரிவித்துள்ளது பெற்றோலியக் கூட்டுத் தாபனம்.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அவசர மற்றும் நாளாந்தத் தேவைக்காக தேவையான அளவு பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மக்கள் பதற்றமடைந்து எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பது தவிர்க்கப்பட வேண்டும். அத்தகைய முயற்சியில் எவரும் இறங்க வேண்டாம் என்றுள்ளது. (ம)

# சுகாதார அறிவுரையை பக்தர்கள் பின்பற்றுக!

## இந்து குருமார் அமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச் 23
கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் பலரும் பாதிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் விரைவில் தேகநலம் பெற அனைவரையும் இறைபிராத்தனை செய்யுமாறு இந்து குருமார் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்து குருமார் அமைப்பு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது

" சீனா தேசத்தில் ஆரம்பித்து, எமது நாட்டிலும் "கொரோனா வைரஸ்" தொற்று ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் நாம் எமது சுய பாதுகாப்பை மேற்கொள்வதன் மூலம் அனைவரையும் காப்பாற்ற முடியும். எமது வாழ்வியலுக்கு சமயம் இன்றியமையாதது. அனைத்து சமயங்களும் வாழ்வியலை கட்டி நிற்கின்றன. ஆனால் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்கள் பணிப்புரைகள் அனைத்தையுமே நாம் கவனத்தில் கொண்டு நடக்க வேண்டும். தேவையற்ற முறையில் மக்கள் கூடுவதையும் தவிர்க்க வேண்டும். - என்றுள்ளது. (ஐ-11)

செய்திகளுக்கு
தொடர்பு கொள்ள
021 493 0000

விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 493 1111

# வவுனியாவில் இருவர் பரிசோதனையில்

வவுனியா, மார்ச்.23
யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மதபோகரின் வழிப்பாட்டில் வவுனியாவிலிருந்து வந்து கலந்துகொண்ட இருவர் வவுனியா மருத்துவமனையில் நேற்றுச் சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த மதபோதகருக்குக் கொரோனா தொற்றுக்குள்ளானமை நேற்றுமுன்தினம் இரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில், வவுனியாவிலிருந்து குறித்த நிகழ்வுக்குச் சென்றிருந்த 8 பேர் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வந்தனர்.

இவர்களில் நெளுக்குளம், புளியங்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவருக்கு உடலில் சுகவீனம் இருக்கின்றமை தெரியவந்தது. அதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அவர்களை உடனடியாக வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். இவர்களுக்குக் கொரோனா தொற்று உள்ளதா என்பது தொடர்பிலான பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-110)

# தடை!

கொழும்பு, மார்ச் 23
பயணிகள் விமானங்கள் மற்றும் கப்பல்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.
'கொரோனா' வைரஸ் தொற்றால் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலான சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இயல்பு நிலை ஏற்படும் வரை இந்தத்தடை நடைமுறையில் இருக்கும். கொரோனா வைரஸ் உலக நாடுகளில் வேகமாகப் பரவிவருகின்றது. இந்த நோயால் இலங்கையில் 77 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தநிலையிலேயே வெளிநாடுகளிலிருந்து குறித்த வைரஸ் இலங்கைக்குள் வருவதைத் தடுக்கும் வகையில் இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (சு-44)

# இந்தியாவால் திரும்பிய 233 பேர் கொடிகாமத்தில்!

## தனிமைப்படுத்தல் முகாமில் 14 நாள்கள் இருப்பர்

**யாழ்ப்பாணம், மார்ச் 23**
**கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இலங்கைக்கு வந்த 233 பேர் நேற்று கொடிகாமம் தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.**



கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. மேலும் இந்த நோய் பரவாதிருக்க, வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.
பாதுகாப்பு அமைச்சு மற்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்க மாவட்டச் செயலர்களுக்கு அறிவுறுத்தியிருந்தது.
அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு உரிய கொரோனா தனிமைப்படுத்தல் நிலையம் கொடிகாமம் 522 ஆவது பிரிகெட் படை முகாமில் 500 பேரை தங்கவைக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் முகாமுக்கே நேற்று நண்பகல் குறித்த 233 பேரும் அழைத்துவரப்பட்டனர். 6 பேருந்துகளில் அழைத்துவரப்பட்ட அவர்களுக்கு உணவு மற்றும் மருந்து வழங்கல் உள்ளிட்டவற்றை இராணுவ சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.
இதேவேளை, கொடிகாமம் இராணுவ முகாம் பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, இரணைமடு இராணுவ முகாமினுள் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்துக்கு 170 பேரும், முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு விமானப்படை முகாமினுள் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலை யத்துக்கு 40 பேரும் அழைத்து வரப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய யாத்திரிகர்களாவர்.
இந்த மூன்று தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்திக் கண்காணிக்கப்படுவார்கள் என்று இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார். (ப 22,)

# 3 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

கொடிகாமம், மார்ச் 23
கொடிகாமம் வடக்கு ஐயனார் கோவிலடிப் பகுதியில் வசிக்கும் மூன்று குடும்பங்களுக்கு, உலர் உணவுப் பொருள்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன.
கொடிகாமத்தில் அன்றாடம் கூலித் தொழிலை மேற்கொள்ளும் மூன்று குடும்பத்தினர், ஊரடங்குச் சட்டம் காரணமாகத் தொழில் இன்றி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருந்தனர்.
இது குறித்து இலங்கை முதலுதவிச் சங்கத்தினரிடம் தெரிவித்ததையடுத்து, முன்னாள் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி தர்ஷன ஹெட்டியாராட்சியின் வேண் டுகைக்கு அமைவாக இராணுவத்தினரால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (சு-159)





# தமிழரசுக் கட்சியினரால் மக்களுக்கு உலர் உணவு

யாழ்ப்பாணம்,மார்ச் 23
ஊரடங்குச் சட்டத்தால் வீட்டுக்குள் முடங்கியுள்ள கூலித் தொழிலாளிகளின் குடும்பங்களுக்கு தமிழரசுக்கட்சியின் பச்சிலைப் பள்ளிக் கிளையினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சமூக ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் நிவாரண பணி முன்னெடுக்கப்பட்டது.
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பணிக்கு பிரதேச சபையின் உப தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் உதவி வழங்கினர். (சு)

# பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு வராதீர்கள்!

## பக்தர்களுக்கு தர்மகர்த்தா கோரிக்கை

தென்மராட்சி,மார்ச் 23
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பங்குனி திங்கள் உற்சவத்துக்கு பக்தர்கள் வருகை தருவது, நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுதல் என்பவற்றைத் தற்காலிகமாகத் தவிர்த்து கொள்ளுமாறு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் தர்மகர்த்தா அறிவித்துள்ளார்
பக்தர்கள் தமது அனுஷ்டானங்களை, பிரார்த்தனைகளை வீட்டிலிருந்தவாறே கடைப்பிடிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.
பக்தர்கள் நோய்த் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (சு-159)



# தண்ணீர் அருந்தினால் கொரோனா நெருங்காது!

கொழும்பு,மார்ச் 23
கொரோனாத்தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு, நாள் ஒன்றுக்குக் குறைந்தது 2 லீற்றர் தண்ணீர் அல்லது இயற்கைப் பானங்களை அருந்த வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரி சங்கம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவதற்கு சுகாதாரப் பிரிவினர் வழங்கும் அறிவுரைகளை மக்கள் பின்பற்ற வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் அதிகரித்து கொள்ள சிறந்த உணவுப் பழக்கத்தைப் பின்பற்ற வேண்டும்.
நாள் ஒன்றுக்கு குறைந்தது 2 லீற்றர் தண்ணீர் அல்லது இளநீர் ,கொத்தமல்லி நீர் போன்றவற்றைப் பருகுதுல், விற்றமின் சி நிறைந்த கொய்யா, நெல்லி, தோடை, பப்பாசி, பச்சை முருங்கை இலை, கரட் இலை போன்றவற்றை உண்ணல். இறால், தானியம், மஞ்சள்கருவுடன் முட்டை போன்ற உணவுகளை உட்கொள்ளல். வீட்டில் சமைத்த உணவுகளை உண்ணல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவும் என்றுள்ளது. (சு-7)




வரலாற்றுச் சிறப்பு மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அமைதியான முறையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ஐ)

# சகல உதவிகளையும் அரசுக்கு வழங்குவோம்

*ஐ.தே.க வின் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு*



கொழும்பு, மார்ச் 23

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நெருக்கடியை அரசியலுடன் கலக்க முடியாது. எனவே அரசியல் வேற்றுமைகளைக் கடந்து இதனை எதிர்கொள்வதற்கான அனைத்து உதவிகளையும் அரசுக்கு வழங்குவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தற்போதைய சூழ்நிலையில் அரசியலை முழுவதுமாக ஒதுக்கி வைத்துவிடுகின்றேன். இப்போது அரசுக்கு, எமது உதவி தேவைப்படுமெனில், எம்மிடமிருந்து உதவி கோருவதற்கு அரசு விரும்பும் பட்சத்தில் அதனைச் செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நாமனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது கட்டாயம் என்று மேலும் தெரிவித்தார். (த)

# பல்கலைக்கழக மாணவருக்கு இலவச இணைய வசதி

கொழும்பு, மார்ச் 23

அரச பல்கலைக் கழகங்களில் ஈகற்கை முறைமையின் கீழ் பதிவுசெய்துள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக இணைய வசதிகளை இலவசமாக வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

மாணவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை இன்று முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை வழமைக்கு திரும்பும் வரை மட்டுமே இந்த இலவச இணையச் சேவை நடைமுறையில் இருக்கும். (ஓ,5)



## இலங்கையிலிருந்து
# விமானங்கள் செல்லலாம்

கொழும்பு, மார்ச் 23

**கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவுவதை தடுப்பதற்காக விமான நிலையத்துக்கு வருகை தரும் பகுதியை மூடிவிட எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.**

வெளிச்செல்லும் பகுதி திறந்திருக்கும் என்பதுடன், இலங்கைக்கு வெளியே பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் விமானங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து இடைநிற் பயணிகள் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

துறைமுகத்தில் அனைத்து ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளும் தடையின்றி வழமை போன்று மேற்கொள்ளப்படும்.

பயணிகள் நாட்டுக்குள் வருகைதருவதை தவிர்ப்பதற்கு துறைமுக அதிகார சபை பின்பற்றும் நடைமுறைகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

கொரோனா வைரஸ் பரவுவதன் காரணமாக நாட்டில் உருவாகியிருக்கும் நிலைமைகள் இயல்பு நிலைக்கு திரும்பும் வரை இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதாக அரசு தெரிவித்துள்ளது. (ஓ,5)

# விருப்பு இலக்கம் இப்போதைக்கில்லை

கொழும்பு, மார்ச் 23

கொரோனா சிக்கலால், பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி இறுதி செய்யப்படவில்லை. இதனால் உரிய திகதி அறிவிக்கப்படும்வரை வேட்பாளர்களுக்குரிய விருப்பு இலக்கத்தை வழங்க முடியாது என்றுதேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொதுத் தேர்தலை நடத்துவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. தேர்தலை ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் அது சாத்தியப்படவில்லை. இந்தநிலையில், மே மாதத்தில் தேர்தலை நடத்த வாய்ப்பு ஏற்படுமா என்று ஆராயப்படுகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. (த)

# கொரோனா வைரஸ் சிறப்பு வர்த்தமானி

கொரோனா வைரஸ் தொற்று நோயானது 'அவசர தனிமைப்படுத்தலுக்குள்ளாக வேண்டிய தொற்று நோய்' என பிரகடனப்படுத்தப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் அவசர தொற்று நோயிலிருந்து தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அச்சிடப்பட்டுள்ள இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 1925ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28 மற்றும் 1960ஆம் ஆண்டு மே ஆறாம் திகதி அவசர நிலைமைகளில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களினது விசேட அம்சங்கள் சிலவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து நபர்களை பாதுகாப்பதற்காக அவசர தனிமைப்படுத்தலுக்குள்ளாக்க வேண்டிய தொற்றுநோயாக பிரகடனப்படுத்துவதாக குறிப்பிட்டு சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கையொப்பமிட்டுள்ளார். (ஓ,5)

# ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொதிகள் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக முழுமையாக பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த உணவுப் பொருள்களை நாளை செவ்வாய்க்கிழமை பாதிக்கப்பட்டோருக்கு நேரடியாக சென்று வழங்க வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது

"வடக்கு மாகாண மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநருடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தொலைபேசியில் உரையாடினேன்.

இதன் போது தான் வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டச் செயலர்களுடன் மாவட்ட நிலவரம் தொடர்பில் கலந்துரையாடி வருவதாக தெரிவித்தார்.

குறிப்பாக அன்றாடம் உழைக்கின்ற மக்களின் பிரச்சினைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொருள்களை அவர்களுடைய இடங்களுக்கு கொண்டு சென்று வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக ஆளுநர் தெரிவித்தார் -என்றார். (ஐ-56)

# பங்குச் சந்தைக்கும் பூட்டு!

கொழும்பு, மார்ச் 23

கொழும்பு பங்குச்சந்தை நடவடிக்கைகள் இன்றுதிங்கட்கிழமையும், நாளைசெவ்வாய்க்கிழமையும் இடம்பெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊரடங்கு உத்தரவு கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் நீடிக்கப்பட்டதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரமும் பங்குச்சந்தை நடவடிக்கைகள் நான்கு நாள்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# அறிந்தும் அறியாமலும்



## விமலின் கேக் ஜோக்

பொதுஜன பெரமுனவில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுவில் கையெ முத்திடும் நிகழ்வு கடந்த வாரம் கொழும்பு 07, விஜயராம மாவத்தையில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது அல்லவா. அப்போது பல சுவாரசியமான சம்பவங்கள் இடம் பெற்றன.

மஹிந்த உள்ளிட்ட வேட்பாளர்கள் முற்பகல் 11.52 இற்கு கையெழுத்திட்டனர். அந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மைத்திரி கையெழுத்திடவில்லை.

பின்னர் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னம் பொறிக்கப்பட்ட கேக் ஒன்று அங்கு கொண்டுவரப்பட்டது. அதை மஹிந்தவே வெட்டினார். முதல் துண்டை அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு ஊட்டினார். பின்னர் நீங்களே எல்லோருக்கும் பகிர்ந்து கொடுங்கள் என்று பந்துலவிடம் கூறினார். பந்துல ஒரு துண்டை எடுத்து விமல் வீரவன்சவுக்கு ஊட்டினார். அப்போது விமல் கேட்டார்..

"அமைச்சரே நான் வெற்றி பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதானே ஊட்டுகிறீர்கள்.

நான் மண் கவ்வ வேண்டும் என்று நினைக்கவில்லை தானே" என்று . அதற்கு சிரித்துக்கொண்டு பதிலளித்த பந்துல. "நான் அப்படி நினைப்பேனா அமைச்சரே..நீங்கள் இந்த அரசின் அச்சாணி அல்லவா. உங்களது தோல்வியை நான் விரும்புவேனா?" என்றார்.

பந்துலவும் விமலும் கொழும்பு மாவட்டத்தில் ஒன்றாகப் போட்டியிடுவதால் விருப்பு வாக்குப் போட்டி அவர்களிடையே உண்டு. அதை மனதில் வைத்துக்கொண்டுதான் விமல் இப்படிக் கேட்டார் என்கிறார்கள் விடய மறிந்தவர்கள். அந்த நிகழ்வில் மைத்திரியைக்கூட மறைமுகமாக கிண்டல் செய்தார்களாம் சிலர்.

**பதவி போனால்
எல்லாமே போய்விடும்.**

## கணவனுக்கு வாக்களிக்காதே!

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் ஒன்றிணைந்து போட்டியிடுகின்றபோதிலும் அவர்கள் கீரியும் பாம்புமாகவே செயற்படுகின்றனர். ஒருவரை ஒருவர் வீழ்த்துவதிலேயே குறியாக இருக்கின்றனர்.

இதேபோன்றதொரு போட்டி 2015 நாடாளுமன்றத் தேர்தலிலும் இருந்தது. அன்று மைத்திரி ஜனாதிபதியாகி சுதந்திரக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டு மஹிந்த அணி, மைத்திரி அணி என்று இரு அணிகள் உருவாகி இருந்தன. இருந்தும், நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு தரப்புகளும் ஒன்றாகவே போட்டியிட்டன. ஆனால், முட்டி மோதின. ஒருவரை ஒருவர் காலை வாரும் வேலைகளையே செய்தன.



கணவனுக்கு வாக்குப் போடவேண்டாம் என்று மனைவியிடமே பிரசாரம் செய்யும் அளவுக்கு உட்கட்சி மோதல் இருந்தது. ஆம், குருநாகல் மாவட்டத்தில்தான் இந்த அதிசயம் நிகழ்ந்தது.

அப்போதைய அமைச்சர் சாந்த பண்டார மைத்திரியின் தரப்பாக இருந்து போட்டியிட்டார். அவரைத் தோற்கடிப்பதற்காக மஹிந்த அணியினர் பிரசாரம் செய்தனர்.

அவருக்கு வாக்குப் போட வேண்டாம் என்று அவரது மனைவியிடமே பிரசாரம் செய்தார்களாம் மஹிந்தவின் ஆட்கள். அவர்தான் சாந்த பண்டாரவின் மனைவி என்று தெரியாமல்... இதை கணவனிடம் கூறினாராம் மனைவி.. இருந்தும், திட்டமிட்டபடி மஹிந்த தரப்பினர் அவரைத் தோற்கடித்துவிட்டனர். இந்த அனுபவத்தை மனதில் வைத்துக்கொண்டு இப்போதைய தேர்தலில் மிகவும் கவனமாக இருக்கின்றாராம் சாந்த பண்டார. இப்போதும் மைத்திரியின் தரப்பாக அதாவது சுதந்திரக் கட்சியின் சார்பிலேயே அவர் போட்டியிடுகின்றார்.

**மனைவியிடம்
இம்முறையும் மகுடி ஊது
வார்களா மஹிந்தவாதிகள்?**


## கொரோனாவால் பெருமை



*கொரோனா வைரஸில் இருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்காக அரசு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது அல்லவா.*

*அதில் ஒன்றுதான் கொரோனா பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் தொலைபேசிகளுக்கான 'ரிங்டோன்' . இந்த ஐடியா சீனாவுக்கே வரவில்லையாம்.*

*கொரோனாவைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் சீனாவை விடவும் முன்னேற்றகரமாக இலங்கை அரசு சிந்திக்கின்றது என்று கூறி பெருமைப்படுகிறார் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன.*



## இப்படியுமொரு 'சென்டிமெண்ட்'

ஐக்கிய தேசிய கட்சிக்குள் உருவான பிளவுக்கு சின்னமும் ஒரு காரணம். யானைச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று ரணில் தரப்பும் இல்லை வேறு சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று சஜித் தரப்பும் விடாப்பிடியாக நின்றதால்தான் இன்று இரண்டு தரப்புகளும் தனித்தனியாகப் போட்டியிடுகின்றன. யானைச் சின்னத்தை ரணில் தரப்பு கெட்டியாகப் பிடிப்பதற்கு 'சென்டிமென்ட்'காரணம் ஒன்றும் உண்டு.

ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கியவர் டி.எஸ்.சேனநாயக்க. அவரே யானையை அந்தக்கட்சியின் சின்னமாக அறிமுகப்படுத்தினார். அதற்கு வரலாற்றுரீதியான ஒரு கதையும் உண்டு.'சுமன சமன் தெய்வத்தின் தீவிர பக்தன் தான் டி.எஸ்.சேனநாயக்க. அரசியல் ரீதியான பிரச்சினைகள் வரும்போதெல்லாம் அவர் அந்த தெய்வத்திடம்தான் போய் முறையிடுவாராம். கட்சியை உருவாக்கிய புதிதில் சின்னம் தொடர்பிலான பிரச்சினை எழுந்தது.

அப்போது அந்த தெய்வத்தின் முன் மண்டியிட்டு நின்றார். "நல்லதொரு சின்னத்தைக் காட்டு "என்றார். உடனே அந்தச் சின்னமும் கண்ணில் தென்பட்டது. அதுதான் அந்த தெய்வத்தின் வாகனமான யானை. உடனே யானையைச் சின்னமாகத் தெரிவு செய்துகொண்டார்.

இப்படித்தான் ஐக்கிய தேசிய கட்சிக்கு சின்னமாகக் கிடைத்தது யானை. இந்தச் சின்னத்தின்கீழ்தான் போட்டியிட வேண்டும் என்ற விடாப்பிடி ரணிலை விடவும் ருவான் விஜயவர்தனவுக்குத்தான் அதிகம். காரணம் என்ன தெரியுமா? டி.எஸ்.அவரது பாட்டனார். பாட்டனார் உருவாக்கிய சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற சென்டிமெண்ட்தான் காரணம்.

## தோட்டத்தால் வந்த வினை

இந்தத் தேர்தலில் உட்கட்சி போட்டி அதிகம். அது விருப்பு வாக்கை அடிப்படையாகக் கொண்டது. சக வேட்பாளரின் ஊழலை குறைபாடுகளைத் தேடிப் பிடித்து அதை மறைமுகமாகப் பிரசாரம் செய்து கவிழ்ப்பதில் குறியாகவே இருக்கின்றனர் சக வேட்பாளர்கள்.

அப்படித்தான் அனுராதபுரத்தில் அமைச்சர் ஒருவர் சிக்கியுள்ளார். அவர்தான் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன.

அவர் வில்பத்து சரணாலயத்தில் காட்டை அழித்து கற்றாழைத் தோட்டம் செய்கிறார் என்றொரு செய்தி பரவத் தொடங்கியுள்ளது.

வில்பத்து சரணாலயத்தில் கைவைப்பது இந்த நாட்டின் மீதே கை வைப்பது போன்ற ஒரு மாயையை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கிவிட்டார்கள் பேரினவாதிகள்.

இதனால் வில்பத்து விவகாரத்தில் கவனமாக இருக்க வேண்டிய தேவை அரசியல்வாதிகளுக்கு உண்டு. இந்த நிலையில், வில்பத்தில் கற்றாளைத் தோட்டம் என்ற செய்தி பரவி வருவதால் பெரும் தலையிடியை எதிர்நோக்கி வருகிறார் அமைச்சர்.

அப்படியொரு தோட்டம் தனக்கு இல்லை என்று அவர் கூறி வருகின்றபோதிலும், அவரது மாவட்டத்தில் அந்தச் செய்தி அடங்குவதாக இல்லை. இதை யார் செய்கிறார்கள் என்று தேடிப் பார்த்தார் அமைச்சர். அவரது கட்சியில் உள்ளஅவருடன் ஒன்றிணைந்து போட்டியிடுகின்ற சக வேட்பாளர்தான் இந்த வேலையை செய்து வருகிறாராம். எல்லாமே விருப்பு வாக்குகளை குறி வைத்துத்தான்.

**'வாக்குச் செய்யும் மாயம்'**

# மலேரியா மருந்து கைகொடுக்குமா?

உலகை உலுக்கும் 'கோவிட் 19' வைரஸை கட்டுப்படுத்த சுமார் 70 ஆண்டுகள் பழமை வாய்ந்த மலேரியா எதிர்ப்பு மருந்து உதவக்கூடும் என்பது பூர்வாங்க சோதனைகள் மூலம் கண்டறியப் பட்டிருக்கிறது.

'குளோரோகுயின்' என்று பரவலாக அறியப்பட்ட Hydroxy chloroquine என்ற மருந்தை கொரோனா வைரஸ் எதிர்ப்பு மருந்தாகப் பயன்படுத்தலாமா என்பதை உறுதி செய்யும் ஆராய்ச்சிகள் பிரான்ஸில் முழுவீச்சில் தொடங்கியிருக்கின்றன.

கொரோனா சுவாசத் தொற்றைக் குணப்படுத்த Hydroxy chloroquine உதவக்கூடும் என்பதை அதிபர் ட்ரம்ப் அவர்களும் அமெரிக்க உணவு, மருந்து கட்டுப்பாட்டுப் பிரிவும் கோடிகாட்டி இருப்பதை அடுத்து அமெரிக்க மருத்துவமனைகள் இந்த மருந்தை பெருந்தொகையில் கையகப்படுத்தத் தொடங்கியுள்ளன.

இதனையடுத்து இந்த மருந்தின் விற்பனையும் தயாரிப்பும் உலகெங்கும் கிடுகிடுவென அதிகரித்திருக்கிறது.

பிரான்ஸின் மார்செல்லா நகரின் பல்கலைக்கழக மருத்துவமனையில் சில 'கோவிட் 19' நோயாளிகளிடம் இந்த மருந்து மூலம் நடத்தப்பட்ட ஆரம்ப பரிசோதனைகள் நம்பிக்கை அளித்துள்ளன என்று அதன் பணிப்பாளர் தெரிவித்திருக்கிறார்.

நோய்த்தொற்றினால் நாடு ஒரு பெரும் அவலத்தைச் சந்தித்து நிற்கும் தருணத்தில் வெளியாகியுள்ள இந்த நம்பிக்கையும் அறிவிப்பை அரசாங்கத்தின் பேச்சாளர் வரவேற்றுள்ளார்.

பிரான்ஸின் வேறு சில மருத்துவமனைகளிலும் இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பல தசாப்தங்களாக புழக்கத்தில் உள்ளவை, மலிவாகக் கிடைக்கக் கூடியவை, விரைவாகவே பெருந்தொகையில் தயாரித்து விடக்கூடியவை Hydroxy chloroquine மருந்துகள் என்பதால் இந்த சிகிச்சை மீது நம்பிக்கை அதிகரித்துள்ளது.

இந்தச் செய்தி வெளியான கையோடு பல இலட்சம் குளோரோகுயின் மாத்திரைகளை அரசுக்கு இலவசமாக வழங்க உடனடியாக முன்வந்துள்ளது பிரான்ஸின் பிரபலமான மருந்து தயாரிப்பு கம்பனி.

கடந்த சில நாட்களாக மருந்தகங்களில் குளோரோகுயின் வகை மருந்துகள் வேகமாக விற்றுத் தீர்ந்துள்ளன. ஆனால் பூரணமாக நிரூபிக்கப்படுவதற்கு முன்னரே மக்கள் இந்த மருந்து ஒரு சரியான சிகிச்சை முறை என்ற முடிவுக்குத் தாங்களாகவே வந்துவிடக்கூடாது என்று சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

*பிரான்ஸில் இருந்து*
*'குமாரதாஸ்'*

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சுந்தரலிங்கம்

*பிறப்பு:* *28.06.1958* — *இறப்பு:* *22.03.2020*

(முன்னாள் அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரர், முன்னாள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர், முன்னாள் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத் தலைவர், முன்னாள் லயன்ஸ் கிளப் தலைவர் (தற்போது உறுப்பினர்), முன்னாள் வர்த்தக தொழிற்துறை மன்றம் ஆளுநர் சபை உறுப்பினர், இயக்கச்சி மல்வில் கிருஸ்ணன் கோயில் செயலாளர், பேச்சி அம்மன் கோயில் உப தலைவர்)



**பச்சிலைப்பள்ளி பளையைப் பிறப்பிடமாகவும், 211 கண்டி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம் (22.03.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சேர்மன் சின்னத்துரை மற்றும் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவகியின் அன்புக் கணவரும், பிரியதர்சினி (பஷன் டிசைனர்), சிறிஜனார்த்தனன் (Eng), காயத்திரி (Eng), திருணதர்சி (Dr), சிறிசயந்தம் (Dr) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிந்துபாத்தி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

*211, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**
**0777222010**

## மரண அறிவித்தல்

### தம்பையா விநாயகமூர்த்தி

*தோற்றம்* *26 ★ 04 ★ 1951*



*மறைவு* *21 ★ 03 ★ 2020*

**சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா விநாயகமூர்த்தி 21.03.2020 அன்று காலமானார். அன்னார் இராணிமலரின் அன்புக் கணவரும், பிறேம்நாத், கோபிநாத் ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று 23.03.2020 திங்கள் கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரிகைகளுக்காக கொடிகாமம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**தகவல்:**
**கோபிநாத் (மகன்)**
*+94 77 072 8824*

## மரண அறிவித்தல்

### பிறேமா குணபாலசிங்கம் (சோபா)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமா கவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணபாலசிங்கம் பிறேமா 21.03.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், குணபாலசிங்கத்தின் (கடவுள்) அன்பு மனைவியும், நிசாந்தன் (சுவிஸ்), டினேஜா (லண்டன்), நிசாந்தினி, ஜெனனி (யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்), கஸ்தூரி (யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மவதி (சுவிஸ்), பாமா (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சரவணபவன், உமாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சயிந்தன் (லண்டன்), சபிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சயித், சாத்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தனபாலசிங்கம் (சுவிஸ்), நிசாந்தன் (சுவிஸ்), காலஞ் சென்றவர்களான புஸ்பமலர், புஸ்பராணி மற்றும் சரோஜினி தேவி (பணிப்பாளர், சமுர்த்தி வவுனியா), அம்பாலிகை (கோண்டாவில்), அம்பிகை (ஜேர்மனி), பவானி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக 11 மணியளவில் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ந.குணபாலசிங்கம் (கடவுள்)*
*நாகபூசணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# எம்மை பாதுகாப்பதன் மூலம் எமது இனத்தைக் காப்போம்

## தமிழ் மக்களுக்கு சரவணபவன் அறிவுரை

**யாழ்ப்பாணம், மார்ச் 23**

**உலகம் முழுவதும் மிக வேகமாக பரவி உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தொற்று தற்சமயம் 177 நாடுகளில் உள்ள இரண்டு லட்சத்து 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட மனித உயிர்களைப் பலி கொண்டு விட்டதாகவும் தகவல்கள் வெளிவந்தன. கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான மிக அவதானமான விழிப்புணர்வுடன் எம்மை நாமே பாதுகாப்பதன் மூலம் எம்மையும் எமது இனத்தையும் பேராபத்தில் இருந்து காப்பாற்றும்படி எமது மக்களை அன்புடனும், உரிமையுடனும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணவபவன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அதில் மேலும் உள்ளதாவது ஏறக்குறைய 90 ஆயிரம் பேர் மருத்துவ சிகிச்சை மூலம் குணப்படுத்தப்பட்டுள்ளனர் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் அறியக் கூடியதாகவுள்ளது. அதேவேளை இலங்கையும் இந்த கொடிய நோயில் இருந்து தப்பிவிட முடியவில்லை. நேற்றுவரை இந்த நோய் காரணமாக 77 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. இதுவரை உயிரிழப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று சற்று நிம்மதியளிக்கும் விடயம்.

இப்படியான நிலையில் கடந்த மார்ச் 15 ஆம் திகதி பிலந்தெல்பிய நிகர் சபையைச் சேர்ந்த சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு மதபோதகர் அரியாலையில் உள்ள தேவாலயத்தில் ஆராதனையை மேற்கொண்டு விட்டு அன்றே சுவிஸ் திரும்பிவிட்டார் எனவும், அங்கு அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

மேற்படி ஆராதனையில் கலந்து கொண்டவர்களில் இருவர் சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண்காணிக்கப்பட்டுவரும் நிலையில் மொத்தம் ஐவர் சந்தேகத்துக்கு இடமானவர்களாகக் காணப்பட்டுள்ளனர்.

அதை விட அரியாலை தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனையில் 150க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களில் அதிகமானோர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களை அடையாளம் கண்டு மேல் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

எப்பிடியிருப்பினும் வடபகுதியையும் கொரோனா வைரஸ் தொற்று பரவும் ஒரு அபாய நிலை ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் 15 வென்ரிலேற்றர்களே உண்டு எனவும் ஒரு நேரத்தில் 15 பேருக்கே சிகிச்சை அளிக்க முடியும் எனவும் தெரியவருகிறது. கொரோனா நோய் பாதிப்புக்கு உட்பட்டோருக்கு மட்டுமின்றி ஏனைய அவசர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டோருக்கும் இவற்றையே பயன்படுத்தவேண்டும்.

யாழ்ப்பாணம், முல்லை த்தீவு, கிளிநொச்சி ஆகிய 3 மாவட்டங்களில் மேற்படி கிகிச்சையை மேற்கொள்ளக் கூடிய படுக்கைகள் 22 மட்டுமே உள்ளன எனவும் அறிய முடிகிறது. எனவே இங்கு கொரோனா நோய் வேகமாகப் பரவ ஆரம்பிக்குமானால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதுடன் அநாவசிய உயிரிழப்புக்களும் ஏற்படக் கூடும்.

இன்று அதிகாரத்தில் இருக்கும் இனவாத ஆட்சியாளர்கள் உடனடியாக போதிய மருத்துவ உபகரணங்களையும், ஏனைய வசதிகளையும் வழங்கி வடபகுதியில் இந்த நோய் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. எனவே எம்மை நாமே பாதுகாக்க வேண்டிய தேவை எம்முன் எழுந்து நிற்கிறது. எனவே நாம் ஒன்று கூடும் விடயங்களைத் தவிர்த்தும் மருத்துவர்கள் வழங்கும் ஆலோசனைகளை இறுக்கமாக கடைப்பிடித்தும் இயன்றவரை வீடுகளை விட்டு வெளியேறாமலும், காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைகளை அணுகியும் எம்மை நாமே பாதுகாப்பதில் தீவிர அக்கறை காட்ட வேண்டும்.

போரின்போது, அதன் பின்பும் அரசும், அரச படைகளும் மேற்கொண்ட இராணுவத் தாக்குதல்கள் படுகொலைகள் உட்பட பல்வேறுபட்ட முறைகளிலான இன அழிப்புக்கு முகம் கொடுத்து இலட்சக்கணக்கான உயிரிழப்புகளுக்கு முகம்கொடுத்தவர்கள் நாம்.

இன்னொருமுறை கொரோனா வைரஸ் மூலம் ஒரு பேரழிவுக்கு உட்பட முடியாது. நாம் ஒவ்வொருவரும் எம்மை பாதுகாப்பது நாம் எமது இனத்தை பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கையின் ஒரு பகுதி என்பதை புரிந்துகொ ள்ள வேண்டும். என்றுள்ளது.

### சுகாதார...

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரனிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிமனையில் கொரோனா தடுப்பு முன்னாயத்தக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தி லேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

'அரியாலை தேவாலயத்தில் இடம்பெற்ற விவகாரம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார். அதனையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகரால், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மிரட்டப்பட்டுள்ளார். இந்த விடயத்தை வெளியிட்டு மக்களை பயப்பீதிக்குள்ளாக்கியமைக்காக நாங்கள் உங்களைக் கைது செய்வோம் என்று எச்சரித்துள்ளனர்' இவ்வாறு பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டினார்.

**நடந்தது என்ன?**

இதன் பின்னர் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் விளக்கமளித்தார். அரியாலைச் சம்பவம் தொடர்பில் தனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த தேவாலயத்தின் மத போதகருடன் பேசினேன். சுவிஸிலிருந்து வந்து சென்ற மதபோதகர் கொரோனா தொற்றுச் சந்தேகம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டார். அதனை விட அவரது நண்பர்கள் கொரோனாவால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் அதிலிருந்து மீள்வதற்குப் பிரார்த்திக்குமாறும் கூறினார். இது தொடர்பில் எங்களது அதிகாரிகள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் என்னுடன் கலந்துரையாடினர்.

மதபோதகர் நடத்திய ஆராதனைக் கூட்டத்துக்குச் சென்றவர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடினேன். ஆராதனைக்குச் சென்றவர்கள் விவரங்களைப் பதிவு செய்ய 'ஹொட்லைன்' இலக்கம் அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அச்சு ஊடகங்கள் இல்லாமையால், காணொலி ஊடாக அதனை வழங்கினேன்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி என்னைத் தொடர்பு கொண்டு, சுவிஸிலிருந்து வந்த மதபோதகருக்கு கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதா என்று கேட்டார். எந்த அடிப்படையில் அந்தத் தகவலை வழங்கியதாக என்னிடம் கேட்டார். தென்கொரியாவிலும் இதேபோன்று தேவாலயத்திலிருந்தே கொரோனா நோய் பரவியது. அந்த அடிப்படைகளை வைத்தே முன்னாயத்த நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்தோம் என்று குறிப்பிட்டார்.

**கொரோனாவுக்கா அறிகுறி அதிகம்**

இதேவேளை யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆராதனைக் கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கொரோனாவுக்கான அறிகுறி அதிகமாக இருப்பதாக மருத்துவர் சிவன்சுதன் என்னிடம் தெரிவித்தார். இந்தத் தகவல்களின் அடிப்படையில் ஆராதனைக் கூட்டத்தில் பங்கேற்றோர் விவரம் திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார். பொலிஸார் தலையீடு செய்த விவகாரத்தை மறந்து எதிர்காலத்தில் செயற்படுமாறும், இவ்வாறான பிரச்சினைகள் எழுந்தால் தனக்குத் தெரியப்படுத்துமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது குறிப்பிட்டார். (ஒ.ப)

### வர்த்தக...

மகேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பான நடமாட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில், பொது மக்களுக்கும் மற்றும் அனைத்து சேவை வழங்கும் நிறுவனங்களான மருத்துவமனைகள், அரச, தனியார் நிறுவனங்கள், வர்த்தக வியாபார நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்து சேவை வழங்கும் நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள்.

பொதுமக்கள் கூட்டமாக மற்றும் நெருக்கமாக இருப்பதை சகல நிலைகளிலும் தவிர்த்துக் கொள்ளல்.

இயன்றவரை மற்றவரிடமிருந்து குறைந்தது 3 அடி (மீற்றர்) தூரம் தள்ளியே இருத்தல், வரிசையில் நிற்கும் போதும் மற்றும் நடந்து செல்லும் போதும் அமரும்போதும் இந்த 3 அடி இடைவெளியை பின்பற்றல், கூட்ட ஒழுங்குகளின்போது ஆசனங்களுக்கு இடையேயான குறித்த நடைமுறையை பின்பற்றல், சேவை வழங்கும் நிறுவனங்களான மருத்துவமனைகள் உட்பட அரச, தனியார் நிறுவனங்கள், வர்த்தக வியாபார மற்றும் சுயசேவை வியாபார நிறுவனங்கள் தங்களது சேவை பெறுநர், வாடிக்கையாளர்களையும் மேற்படி இடைவெளியை பேணும் வண்ணம் அறிவுறுத்துவதுடன் அதனை கண்காணித்து நெறிப்படுத்துவதற்கு வழிகாட்டி ஒருவரை நியமித்தல்,

சகல மத வழிபாட்டிடங்களிலும் கூட்டம் சேர்வதை தவிர்த்துக் கொள்ளல், விழாக்கள், வைபவங்களை குறிப்பிட்ட நாள்களுக்குள் ஒழுங்கமைப்பதை தவிர்த்துக் கொள்ளல் அல்லது ஒத்திவைத்தல், கொரோனா தொற்று அறிகுறிகள் காணப்படுமானால் உடனடியாக சுய தனிமைக்கு உட்படுவதுடன் மருத்துவ உதவியை அவசர சேவை தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து விவரங்களை தெரிவித்தல், அத்தியாவசிய மற்றும் ஏனைய பொருள்கள் தட்டுப்பாடற்ற முறையில் மக்களுக்கு விநியோகிக்க கூடியவகையில் கூட்டுறவு மற்றும் வர்த்தக நிலையங்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் தேவையற்ற செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தாது தேவைக்கேற்ப கொள்வனவு செய்தல் வேண்டும். என்று குறிப்பி டப்பட்டுள்ளது. (ஒ,5)

பட்டம் வழங்கலும்
75ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



அருள் மிகு ஸ்ரீ
மாணிக்கப்பிள்ளையார்
ஆலயத்தில் கடந்த பதினைந்து
வருடங்களாக சைவ
இன்னிசைச் சொற்பொழிவு
ஆற்றிவரும்

கலாபூசணம்
அருள் மொழியரசு
சிவத்திரு வ.குமாரசாமி ஐயர்

அவர்களது சைவத்துக்கும்,
தமிழுக்கும் ஆற்றிவரும்
சேவையை கௌரவிக்கும்
முகமாக
சைவத் தமிழ் நாவலர்
என்னும் பட்டத்தைச் சூட்டி
(வழங்கி) கொள்வதோடு, அவரது
75ஆவது பிறந்த தின
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ
மாணிக்கப்பிள்ளையார்
ஆலய பரிபாலன சபை,
அடியவர்கள்.



# 100 கோடி மக்கள் வீட்டில் முடக்கம்!

வொஷிங்டன், மார்ச் 23
கொரோனா வைரஸின் தாக்கம் உலகமெங்கும் பரவிவரும் நிலையில், 100 கோடி மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர்.
கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்குநாள் பரவலாகி வருகின்றது. அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, இலங்கை, கனடா, சுவிஸ், இத்தாலி, ஈரான் உள்ளிட்ட பல நாடுகளில் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
உலகம் முழுதும் சுமார் 160க்கும் மேற்பட்ட நாடுகளில் கொரோனா மக்களின் இயங்கு நிலையை முடக்கியுள்ளது. சுமார் 100 கோடி மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளனர். சுமார் 150 கோடி மக்கள் பகுதியளவில் மட்டும் வெளியில் சென்று வருகின்றனர் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. (ம)

# ‘கொரோனா’ சீன வைரஸ்

## ட்ரம்ப் சீண்டல்

வொஷிங்டன், மார்ச் 23
கொரோனாவை சீன வைரஸ் என்று மீண்டும் சீண்டியுள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.
கொரோனா வைரஸ் உருவாகி, பரவி வருவதற்கு சீனா மீது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தார். கொரோனா வைரஸ் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வதில் சீனாவிடம் வெளிப்படைத்தன்மை இல்லாமல்போனதால், அதற்கான விலையை இப்போது உலகம் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அதற்கு பதிலடி கொடுத்த சீனா, கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான சீனாவின் போராட்டத்தை அமெரிக்க தரப்பில் சிலர் களங்கப்படுத்த முயற்சிப்பதாகக் கூறியது.
இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது மீண்டும் சீனா மீது குற்றம்சாட்டும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். கொரோனா ‘சைனீஸ் வைரஸ்’. அதில் இரண்டாவது கருத்தில்லை - என்று ட்ரம்ப் குறிப்பிட்டார்.
‘நீங்கள் இவ்வாறு குறிப்பிடுவது நியாயமல்ல. சைனீஸ் வைரஸ் என்று ஒன்றுமில்லை. நீங்கள் வக்கிர எண்ணத்தில் இவ்வாறான கருத்தை வெளிப்படுத்துகின்றீர்கள்’ என்று ட்ரம்புக்கு செய்தியாளர்கள் பதிலடி கொடுத்தனர். (ம)






# கொரோனாவுக்கு மத்தியில் வடகொரியாவால் ஏவுகணை

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் வடகொரியாவால் ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.
உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் பன்மடங்காக அதிகரித்துவரும் நிலையில் வடகொரியா அரசு இதுவரை இந்த வைரஸ் தொற்று தொடர்பாக வெளிப்படையாக எந்த புள்ளிவிவரத்தையும் வெளியிடவில்லை. எனினும், கொரோனா வைரஸ் தாக்கத்தை முழுவீச்சில் கட்டுப்படுத்தும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசுக்கு சொந்தமான ஊடகங்கள் அவ்வப்போது செய்தி வெளியிட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அந்த நாடு அடுத்தடுத்து இரண்டு ஏவுகணைகளைச் செலுத்தி சோதனை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இத்தாலியில் இறப்பு 5,000!

உரோம், மார்ச் 23
இத்தாலியில் மட்டும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தொட்டுள்ளது.
சீனாவில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தற்போது உலக நாடுகளைக் கடுமையாகத் தாக்கியுள்ளது. இத்தாலியே கொரோனாவால் மிகவும் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் முதலிடத்தில் உள்ளது. அங்கு இதுவரையில் 54 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழப்பு 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. (ம)

# கொரோனாவுக்கு எதிராக ஈரான் அரசு துரிதவேகம்!

தெஹ்ரோன், மார்ச் 23
கொரோனாவால் ஈரானில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில், ஈரான் அரசு துரித கதியில் செயற்பட்டு வருகின்றது.
உலகமெங்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனாவால் ஈரானில் சுமார் 21 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 556 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் நான்காவது இடத்தில் ஈரான் உள்ளது. இந்த நிலையில் ஈரானில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு ஈரான் முழுவதும் கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (ம)

# வெள்ளை மாளிகையில் கொரோனா!

அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையில் ஒரு அதிகாரிக்கு கொரோனா நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. துணை அதிபரின்கீழ் வேலை செய்துவரும் அதிகாரிக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து வெள்ளை மாளிகை உச்சக்கட்டப் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. துணைஅதிபருக்கும்கொரோனா பரவியிருக்கலாம் என்ற அச்சத்தின் அடிப்படையில் அவருக்கும் விரைவில் சோதனை நடத்தப்படவுள்ளது. அத்துடன்வெள்ளைமாளிகையில் பணியாற்றும் அனைவருக்கும் கோரோனா சோதனை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)



## முகக் கவசங்களை கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை

முகக் கவசங்களை கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய அரசு எச்சரித்துள்ளது.
இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் மிகையாக உணரப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. முகக் கவசங்களையும், கிருமி நீக்கிகளையும் மக்கள் பயன்படுத்தி சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதையடுத்து பலரும் முகக் கவசங்களை பதுக்க ஆரம்பித்துள்ளனர். சிலர் கூடுதல் விலைக்கு விற்று வருகின்றனர். இந்த நிலையில் முகக் கவசங்களை கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய அரசு எச்சரித்துள்ளது.
முகக் கவசங்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக நாள் ஒன்றுக்கு சுமார் ஒன்றரைக்கோடி முகக் கவசங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஒரு வாரத்துக்குள் இரட்டிப்பு தொற்று

### எச்சரிக்கிறார் கேஜ்ரிவால்



**புதுடெல்லி, மார்ச் 23**
**ஒரு வாரத்துக்குள் இந்தியாவில் கொரோனா தொற்று இரட்டிப்பாகி உள்ளது. இதனால் மக்கள் எச்சரிக்கையுடனும் எதற்கும் தயாராகவும் இருக்க வேண்டும் என டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலகஅளவில்கொரோனாவைரஸ் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. இதுவரை இந்தியாவில் கொரோனா வைரஸால் 324 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழப்பு 6ஆக உயர்ந்துள்ளது. கோவிட்19 காய்ச்சலால் இந்தியாவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை ஒரு வாரத்துக்குள்ளாக இரண்டு மடங்காகிஉள்ளது. இந்த ஏற்றத்தை அடுத்து நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும். அதேநேரத்தில்யாரும் பயப்படவேண்டாம். அனைவரும் உறுதியுடனும் தேசமாக ஒன்றிணைந்தும் இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் ஆதரவளிக்க வேண்டும்' - என்றார். (ம)

## வளைகுடா வாசியால் கேரளாவில் பதற்றம்!

புதுடெல்லி, மார்ச் 23
வளைகுடாவில் இருந்து வந்து ஊர் சுற்றித் திரிந்தவரால் கேரளாவில் சுமார் 3 ஆயிரம் பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது.
கேரள மாநிலத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த வெள்ளிக்கிழமை புதிதாக 12 பேர் பாதிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது. காசர்கோடு மாவட்டத்தில் மட்டும் இதுவரை 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 52ஆக உயர்ந்துள்ளது.
இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டு வீட்டில் தனிமையில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்ட ஒருவர், சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளிக்காமல் பொது இடங்களில் சுற்றியுள்ளார். வளைகுடா நாட்டில் இருந்து கடந்த மார்ச் 11ஆம் திகதி கோழிக்கோடு சர்வதேச விமான நிலையத்துக்கு அவர் வந்துள்ளார். அப்போதே அவருக்கு காய்ச்சல் இருந்துள்ளது. அதைப் பொருட்படுத்தாமல் பொது நிகழ்ச்சிகள், திருமண விழாக்கள், கால்பந்து போட்டி நடந்த இடங்களுக்குச் சென்றிருக்கிறார்.
இரண்டு எம்எல்ஏ.க்களை சந்தித்து அவர்களோடு கைகுலுக்கி ஆரத்தழுவி பேசி இருக்கிறார். அதன் பிறகு மார்ச் 14ஆம் திகதி அவருக்கு காய்ச்சல் அதிகமாகி இருக்கிறது. காசர்கோடு அரசு மருத்துவமனைக்குச் சென்று மீண்டும் மருத்துவப் பரிசோதனை செய்துள்ளார். அதன் பிறகே மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்ட சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளித்திருக்கிறார்.
இதற்கிடையில், கோவிட் 19 காய்ச்சலோடு குறைந்தபட்சம் 3 ஆயிரம் பேரை அவர் சந்தித்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

## சோதனையின் பின்னரே பொலிஸாருக்கும் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணத்தில் பணியிலிருந்து விடுமுறையில் வீடு சென்று திரும்பும் பொலிஸார் 3 தினங்கள் கீரிமலைப் பகுதியில் தங்க வைத்து பரிசோதனைகளின் பின்பே கடமைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.
யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் பொலிஸார் பலர் விடுமுறையில் சென்று மீண்டும் பணிக்குத் திரும்புகின்றனர். பணிக்குத் திரும்பும் பொலிஸார் பொலிஸ் நிலையங்களில் பணிக்கு அமர்த்த முன்பு பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர்.
கீரிமலைப் பகுதியில் அதற்கான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஆரம்பக்கட்ட சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னரே பணிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (ஒ,5,105)

### கொரோனாவால் ஊரடங்கு

# தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும்

### மக்களுக்கு இழப்பீடும் வேண்டும்



மன்னார், மார்ச் 23
கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து நடைமுறையிலுள்ள ஊரங்கு உத்தரவை, தேசிய பேரிடராக அறிவித்து அனைவருக்கும் பொதுவான இழப்பீடுகளை வழங்க முன்வர வேண்டும் என்று மன்னார் மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
நாட்டில் பரவிவரும் கொரேனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்காக நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்துக்கு மன்னார் மாவட்ட மக்கள் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளனர்.
மன்னார் நகரம் மற்றும் பிரதேச ரீதியான வர்த்தக நிலையங்கள் மயான அமைதியாகக் காணப்பட்டது
இதனால் அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்க்கை நடத்திய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தேவையான பொருள்களை வாங்கிச் சேமித்து வைக்கும் அளவுக்கு அவர்களிடம் பண வசதியும் இருக்கவில்லை. இதனால் அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.
மன்னார் பெருநிலப்பரப்பாகக் காணப்படும் மாந்தை, நானாட்டான் முசலி, மடு போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடை செய்ய வேண்டிய வயல்கள் அறுவடை செய்யப்படவில்லை. நெல் விற்பனை செய்யப்படவில்லை. விற்ற நெல்லுக்கான பணம் கிடைக்கவில்லை என்று பல வழிகளிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடைத் தெருக்களிலும், பஸ் தரிப்பிடங்களிலும் தங்கி இருந்து யாசகம் பெற்று கடைகளில் சாப்பிட்டு உயிர் வாழ்ந்து வந்த பலர் இந்த இரண்டு நாள்களாக தாகத்துக்கு நீர் தரக்கூட ஆள்கள் இல்லாமல் பரிதவித்து வருகின்றனர்.
எனவே அரசாங்கம் இந்தக் கொரோனா வைரஸ் தொற்றால் நடைமுறையிலுள்ள ஊரடங்கு உத்தரவை, தேசியப் பேரிடராக அறிவித்து அனைவருக்கும் பொதுவான இழப்பீடுகளை வழங்க முன்வர வேண்டும் என்று மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-213)

### முல்லைத்தீவில்

## சோதனை நிலையங்கள்

முல்லைத்தீவு,மார்ச் 23
நாட்டில் ஏற்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்குச்செல்லும் வீதிகளுக்கு, பொலிஸ் மற்றும் படையினரின் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
தேராவில், திம்புலி, நெடுங்கேணி ஊடாக ஒட்டுசுட்டான் வீதி, மன்னாகண்டல், மாங்குளம், ஒட்டுசுட்டான், முள்ளியவளை முல்லைத்தீவு, வட்டுவாகல், முள்ளிவாய்க்கால்,நாயாறு வீதிகளில் படையினர் மற்றும் பொலிஸாரின் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இந்தச் சோதனை நிலையங்கள் ஊடாக அவசர தேவைகளுக்காகச் செல்வோர் பதிவு செய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். (க-19)



# அயர்லாந்து – வங்கம் தொடர் பிற்போடப்பட்டது

டாக்கா, மார்ச் 23

கொரோனா வைரஸ் பதற்றம் காரணமாக அயர்லாந்து வங்காளதேசம் இடையில் நடைபெற இருந்த ஒருநாள் மற்றும் ரி20 தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 4 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடவிருந்தது. இந்தத் தொடர் இம்மாத இறுதியில் தொடங்குவதாக இருந்தது.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தி வருவதால் இருநாட்டு கிரிக்கெட் சபைகளும் இணைந்துதொடரைத்தள்ளிவைக்கமுடிவுசெய்துள்ளன. நிலவரம் சரியானால் மே மாதம் தொடர் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அவதானத்துடன் இருங்கள் மகேல எச்சரிக்கைத்தொனி

கொரோனாவின் தாக்கத்தில் இருந்து மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல.

இது தொடர்பில் மகேல மேலும் தெரிவித்ததாவது:

கொறானா வைரஸ் இலங்கையில் கடும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். தேவையற்ற விதத்தில் வெளியில் செல்ல வேண்டாம். மருந்துவ ஆலாசனைக்கு ஏற்ப உங்கள் கைகளைக் கழுவுங்கள். கொரோனாவுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உங்களால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குங்கள் – என்றார். (ம)



# தன்னிகரற்ற வீரர் விராட்

## மியான்தத் புகழாரம்

விராட் கோலி உலகின் மிகச் சிறந்த வீரர். அவருக்கு தன்னிகரற்ற வீரர் என்று எவரும் இல்லை இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தானின் முன்னாள் வீரர் மியான்தத்.

கோலி தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அதிகம் கூற வேண்டியதில்லை, அவரது ஆட்டமே அனைத்தையும் கூறுகிறது. யார் சிறந்த வீரர் என்று என்னிடம் கேட்கப்பட்ட போது நான் விராட் கோலி என்றேன். புள்ளிவிவரங்கள் கண்ணுக்குத் தெரிபவை, இது ரசிகர்களுக்கும் தெரியும். தென் ஆபிரிக்காவில் சரிசமமற்ற ஏற்ற இறக்க பிட்சிலும் கோலி நன்றாக ஆடினார். சதம் அடித்தார். வேகப்பந்து வீச்சாளர்களைக் கண்டு அவர் பயப்படுகிறார் என்று ஒரு போதும் கூற முடியாது, அல்லது வேக, பவுன்ஸ்ஆடுகளங்களில்அவரால் விளையாட முடியாது என்றும் கூற முடியாது. அவர் ஒரு கிளீன் ஹிட்டர். அவரின் விளையாட்டைப் பாருங்கள் – என்றார். (ம)

## கொரோனாவால்

# மட்ரிட்டின் முன்னாள் உரிமையாளர் சாவு!

ஸ்பெயின் நாட்டின் தலைசிறந்த கால்பந்துக் கழகமான ரியல் மட்ரிட் அணியின் முன்னாள் உரிமையாளர் கொரோனா வைரஸ் தாக்கி உயிரிழந்தார்:.

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலிக்கு அடுத்தப்படியாக ஸ்பெயின் மற்றும் பிரான்ஸில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாக உள்ளது. ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கழகமான மட்ரிட்டின், முன்னாள் உரிமையாளராக இருந்தவர் லொரென்ஜோ சான்ஸ்.

76 வயதான இவர் கடந்த செவ்வாய்க்கிழமை உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் உடல் நலக்குறைவால் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவர் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




# எவருக்கும் சொல்லாமல் விடைபெறுவார் டோனி!

## கவாஸ்கர் தெரிவிப்பு

எவருக்கும் அறிவிக்காமல், முன்னறிவித்தல் ஏதுமின்றி டோனி ஓய்வை அறிவிப்பார் இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கவாஸ்கர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக்கிண்ண ரி20 தொடருக்கான இந்திய அணியில் டோனி இருப்பதையே விரும்புகின்றேன். ஆனால் இது நடக்கும் என்று எனக்கு நம்பிக்கையில்லை. அணி நகர்ந்து விட்டது. டோனியும் பெரிய அறிவிப்புகளை வெளியிடுபவர் இல்லை. எனவே அவர் அமைதியாக அறிவிப்பில்லாமல் ஓய்வு பெறுவார் என்று நான் நினைக்கிறேன் – என்றார். (ம)



## கொரோனாவுக்கு எதிராக

# யுவராஜ், கைப் போன்று செயற்பட்டு வீழ்த்துவோம்

## மோடி நம்பிக்கை

யுவராஜ், மொகமட் கைப் போன்று சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கி கொரோனாவை வீழ்த்துவோம் என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மோடி.

உலகை அச்சுறுத்தி வரும் ஒரே வார்த்தையாக கொரோனா வைரஸ் மாறிவிட்டது. சீனாவின் வுகான் நகரில் உருவான கொரோனா வைரஸ் 165 மேற்பட்ட நாடுகளில் பாதிப்பை ஏற்படுத் வருகிறது. கொரோனா வைரஸால் இதுவரை உலகளவில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர், 3 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து இந்திய அளவில் நேற்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த ஊரடங்கு உத்தரவை இந்திய வீரர் கைப் வரவேற்று மோடியைப் பாராட்டியிருந்தார்.

முகமது கைப்புக்கு பதில் அளித்த பிரதமர் மோடி, 'மற்றொரு வலுவான பார்ட்னர்ஷிப் அமைக்க சரியான நேரம்' எனத் தெரிவித்தார். மற்றொரு ட்விட்டில் 'இரு மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர்கள் (யுவராஜ்சிங், முகமது கைப்) அமைத்த இணைப்பாட்டம் என்றென்றும் மறக்க முடியாது. இப்போது அதேபோன்று மற்றொரு இணைப்பாட்டத்தை அமைக்க வேண்டிய தருணம். அனைத்து இந்தியர்களும் ஒன்றாக கூட்டுசேர்ந்து, கொரோனா வைரஸுக்கு எதிராகப் போராடி வெல்ல வேண்டும்' எனத் தெரிவித்தார். (ம)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை 361 கஸ்தூரியார் வீதியில் உள்ள நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவட் லிமிட்டேட் பணிமனையில் 23.03.2020 வெளியிடப்பட்டது.